அக்கா, மாமா என்று அழைக்கின்றோம். பாட்டன் பெயர் வைப்பதற்குப் பதிலாக நடிகர் பெயரையும், வடமொழிப் பெயர்களையும் குழந்தைகளுக்கு வைக்கின்றோம். பிள்ளைகளுக்கு வீட்டுப்பெயர் (பட்டப்பெயர்), விலாசம், சார்புடைய கோயில், குலதெய்வம் குறித்த செய்திகளைக் கற்பிக்காது இருக்கின்றோம். பங்காளிகள் மற்றும் ஊர்க்காரர்களோடு தொடர்பு குறைந்து திருவாதிரை, புதுமை முதலிய பழக்கவழக்கங்களை மறந்து அவசர யுகம் நோக்கி ஓடுகின்றோம். ஆண்கள் மற்றும் பெண்கள் நம் சமயவழிப்படி உபதேசம் கேட்கும் வழக்கத்தையும் மறந்தோம். ஆண்கள் மீசைவைத்தல் தற்போது இயல்பாகிவிட்டது.

இவைபோன்றவை பழக்கமாகி, இந்தப் பழக்கம் வழக்கமாகி, நம் முன்னோர்களின் நற்பழக்க வழக்கங்கள் பழங்கதையாகிவிட்டன.

<u>நாளைய போக்கு</u>:-

இன்னும் ஐம்பது ஆண்டுகளில் நம் உறவுமுறைப் பெயர்கள் காணாமல் போகும். படைப்புத் தெய்வங்கள் மறக்கப்பட்டுவிடுவதாலும், குடும்ப தெய்வங்களை மறந்தாலும் அந்தக் குடும்பத்தின் செழிப்பு குறையும். சமயச் சான்றோர்களின் வழிகாட்டுதல் பயனற்றுப் போகும். சகோதர ஒற்றுமை குறைவால் பழங்கால வளவு வீடுகள் புழக்கமின்றிப் போகும்.

<u>படிப்படியான வாழ்வியல் முறைகள்</u>:- (அடுப்படி)

<u>நடைமுறை நோக்கு</u>:-

ஒரு லட்சத்தை ஒட்டிய அளவு மக்கள் தொகை கொண்ட நம் சமூகத்தில், சீதன முறைகள் காரணமாகக் குறைந்த அளவு குழந்தைகள் இருப்பது சிந்தனைக்கு உரியதாகும். பொருளாதார நிலை கருதி பெண்களும் வேலைக்குச் செல்வதால் மக்கட்பேறு வாய்ப்பதும் குறைந்துவிட்டது. வேலைப்பளு, தனிக்குடும்ப முறை காரணமாகப் பிள்ளைகளை நன்மக்களாக வளர்ப்பதில் பல நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதால் ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளோடு இருப்பது சமூகவளர்ச்சிக்குத் தடைக்கல்லாகியது.

மணமுறிவு :- அக்காலத்தில் சிறுவயதில் திருமணம் முடித்ததாலும், பெண்கள் ஏட்டுக் கல்வி பெறாததாலும் தனித்து பொருளீட்டாததாலும் கட்டுப்பாடு உடையவராகவும் உடல்நலம் மிகப்பெற்றும் இருந்தனர். அதனால் நமது சந்ததியும் வலிமை உடையதாய் இருந்தது.

குழந்தைகள் குறைவாக இருப்பதாலும் சீதன முறைகளாலும் இன்று மணப்பெண் தட்டுப்பாடு மிகுந்துள்ளது. மேலும் பெண்களும் அதிக அளவில் பொருள் ஈட்டத் தொடங்கிவிட்ட நிலையில் திருமணமும் தாமதமாகிறது. முறைதலைகளையெல்லாம் பேசிமுடித்து முப்பது வயதில் திருமணம் செய்வதால் பிள்ளைப்பேறு குறையத்தானே செய்யும்?.

சமூகக் கட்டுப்பாடுகள் மீறப்பட்டு பெண் இப்படி இருக்க வேண்டும் என்று மாப்பிள்ளையும், மாப்பிள்ளை இப்படி இருக்க வேண்டும் என்று பெண்ணும் நிபந்தனை விதிக்கும் நிலை உருவாகி உள்ளது. அந்த எதிர்பார்ப்புகள் குறையும் போது மணமுறிவுகள் அதிகமாகின்றன. தோதுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை மனதுக்குக் கொடுக்காததால் சமூகச் சிக்கல்கள் அதிகமாகின்றன.

நாளைய போக்கு :-

இன்னும் ஐம்பது ஆண்டுகளில் இவற்றில் பல சிக்கல்கள் பன்முகம் கொண்டு உருமாறும். பெண்ணுக்கு நகைபோட்டு கூட்டிச் செல்லும் நிலை உருவாகும். சத்தான உணவு முறை பர்கர் பீசாவாக மாறியதால் மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். இளையோரிடத்திலே கட்டுப்பாடற்ற நிலை மேலோங்கும். வேலைப்பளு காரணமாக மீண்டும் தொழில்நாட்டம் அதிகரிக்கும். தலைமுறை இடைவெளி அதிகரிப்பதால் முதியோர் இல்லங்களின் எண்ணிக்கை மிகுதியாகும். மணமுறிவுகளின் விளைவால் மறுமணங்களின் எண்ணிக்கையும் கூடிவிடும்.

கைப்பழக வந்தவருக்கும்கூட கட்டுப்பாட்டை, நாகரிகத்தைக் கற்பித்த நகரத்தாரின் வாழ்வியல் முறை படிப்படியாகச் சரிந்து, குடியேறிய பகுதியில் உள்ளவரின் வாழ்வியல் முறைகளைப் பழகிக் கொண்ட சமூகமாக மாறும்.

நிலையான தீர்வு :- (வீடு புகுப்பித்தல்).

① நம் முன்னோர் செய்த அறமே நம்மைக் காக்கின்றது என்பதனால் அறத்தைக் கைவிடாது இறைவழிபாட்டில் நாட்டம் செலுத்துதல் நம் சமூக முன்னேற்றத்திற்கான முதல் தீர்வாகும்.

② என் சமூகம் எனக்கு என்ன செய்தது? என்று கேட்காமல் நான் சமூகத்திற்கு என்ன செய்தேன்? என்று ஒவ்வொரு நகரத்தாரும் சுயசிந்தனை மேற்கொண்டு சமூக வளர்ச்சிக்கு உரிய வழிமுறைகளான எளியோருக்கு உதவுதல், கல்வி பயிற்றுவித்தல், அன்னதானம் செய்தல் முதலிய அறச் செயல்களை வாழ்வியல் தர்மமாகக் கடைபிடித்தல் வேண்டும்.

③ இன்றுள்ள ஒன்பது கோயில் நகரத்தார் என்ற நிலை மாறாது ஒரே கோயிலில் பிள்ளை கூட்டி, மாற்றுக் கோயிலில் மணம் முடிக்க வேண்டும்.

④ ஒவ்வொரு நகரத்தாரும் தன் குடும்ப நிலை கருதி சமூக பெருக்கத்திற்கு இயன்ற அளவு பிள்ளைகள் பெற்றுக் கொள்ள முன்வர வேண்டும்.

⑤ சமூக வளர்ச்சி கருதி பெரும் தொழில் அதிபர்கள் ஒன்று கூடி மருத்துவக் கல்லூரிகள் தொழில்கூடங்கள் அமைத்து நம்மவர்க்கு முன்னுரிமை தர முயல வேண்டும்.

⑥ கலப்பு மணத்தைக் கண்டித்தலை விடுத்து, இளம் வயதிலேயே சமூகப்பற்றை தன் பிள்ளைகள் மனதில் விதைக்க வேண்டும். மாலை வந்தால்தான் மணம் சிறக்கும் என்று வலியுறுத்த வேண்டும்.

⑦ நமது ஆண்களும் பெண்களும் உபதேசம் கேட்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்த வேண்டும். மடாலயங்களின் துணைகொண்டு சிறிய அளவில் ஏற்படும் மதமாற்றங்களைக் கண்டிக்க வேண்டும்.

(8) சமூகச் சீர்கேட்டிற்கான சாவி மணியாகத் திகழும் மணமுறிவுகளைத் தடுக்க நம் இனத்து உளவியல் ஆலோசகர்களை நியமித்து மணமக்களுக்கு, திருமணத்திற்கு முன்பே ஆலோசனைகள் வழங்க வேண்டும். அவர்கள் ஒத்த மணவாழ்வு, சடங்குகளின் காரணங்கள், முன்னோர் பெருமை, பிள்ளைப்பேறு முதலிய செய்திகளை வலியுறுத்திக் கூற வேண்டும். இந்த 'உளவியல் ஆலோசனை' ஒவ்வொரு நகரத்தார் திருமணத்திலும் கட்டாயம் இடம்பெற வேண்டும். பெற்றோரும் தோசைப் பார்க்காது மனப்பொருத்தம் பார்த்து மணம் முடிக்க வேண்டும். இளையோரும் மணவாழ்வு நிலைக்க மனமொத்து விட்டுக்கொடுத்து வாழ முற்பட வேண்டும்.

(9) கணவனை இழந்த இளம்பெண்களின் மறுவாழ்விற்கு, அவரது கணவர் வீட்டாரே வழிவகுக்க வேண்டும்.

(10) ஊருக்கு ஒரு (வாழுமிடங்களில்) நகரத்தார் சங்கம் மட்டுமே ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும்.

(11) மகளிர் சங்கங்கள், பக்தி மன்றங்கள் அனைத்தும் அந்த ஒரு சங்கத்தின் கீழே செயல்பட வேண்டும் சங்கங்களின் வழி மகளிர் சுயஉதவிக்குழு அமைய வேண்டும். இதன்வழி வருவாயையும் பெருக்கி முன்னேற்றம் காண முடியும்.

(12) பிள்ளையார் நோன்பு மற்றும் பொது விழாக்களில் கலந்து கொண்டு நாம் வாழும் பகுதியில் உள்ள நகரத்தாரின் அறிமுகம் பெற்றிடல் அவசியம்.

(13) இளையோர் நகை தொகை வாங்க மறுத்து மணம் முடிக்க வேண்டும்.

(14) பெண்கள் கல்வி அறிவு பெற்று சிறந்தபோதிலும் பொருளாதாரம் போதிய அளவு இருக்கும் நிலையில் வேலைக்குச் செல்வதைக் காட்டிலும்